


# நேவிராபைன் (விராம்யூன்)

## நேவிராபைன் மருந்து எனக்கு ஏன் கொடுக்கப்படுகிறது?

- நேவிராப்பைன் (விராம்யூன் என்றும் அழைக்கப்படுகிறது) எனும் மருந்து மற்ற மருந்துகளுடன் இணைந்து ஹெச்ஐவி ( ஹ்யூமன் இம்யுனோ டிபிஷியன்சி வைரஸ்) நோயின் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது.
- “ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டெஸ்” எனும் புரோடீனை நேவிராபைன் தடுக்கிறது. இதனால், இது ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டெஸ் இன்ஹிபிட்டர்ஸ் (ஆர்டிஐக்கள்) எனும் மருந்துகள் பிரிவை சேர்ந்தது. ஹெச்ஐவி கிருமி பெருக, அதற்கு இந்த புரோட்டீன் தேவைப்படுகிறது. அதனால் இந்த மருந்து அதை தடுப்பதன் மூலம் ஹெச்ஐவி நோயை தாமதப்படுத்த உதவுகிறது.
- இந்த மருந்தை உட்கொள்ளுவதால், உங்கள் உடலில் உள்ள கிருமியின் அளவை குறைக்கலாம். நீங்கள் எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட நோய்களினால் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் குறையலாம், உடல் அதிக நாள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது அல்லது உடல் ஆரோக்கியத்தை மீண்டும் பெறலாம். உங்கள் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி எடுத்துக் கொள்ள வெண்டும்?

- நேவிராபைன் 200 மி.கி. மாத்திரைகளாக கிடைக்கிறது. பொதுவாக இதை முதல் 2 வாரத்தில் ஒரு நாளைக்கு ஒரு முறை 200 மி.கி. (1மாத்திரை) என்ற அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இது தினமும் இரு முறை 200 மி.கி. என்று அதிகரிக்கப்படுகிறது. நேவிராபைனின் பக்க விளைவுகளை குறைக்க இவ்வாறு செய்யப்படுகிறது.
- நேவிராபைன் உணவுடனோ அல்லது தனியாகவோ எடுத்துக் கொள்ளலாம்.
- நேவிராபைன் உலர்ந்த இடத்தில், அறையின் சீதோஷண நிலையில் வைக்க வேண்டும்.
- குழந்தைகளிடமிருந்து நீக்கி வைக்கவும்.

## ஒரு நேர மருந்தை நான் எடுத்துக் கொள்ள மறந்தால் என்ன செய்ய வேண்டும்?

- தவறவிட்ட மருந்தை முடிந்தவரை உடனே எடுத்துக் கொள்ளவும். ஆனால் உங்கள் அடுத்த வேளை மருந்திற்கும், தவற விட்ட மருந்திற்கும் இடையே 2மணி நேரத்திற்கும் குறைவாக இருந்தால் வழக்கமான முறையில் மருந்தை எடுத்துக் கொள்ளவும், இதை இரட்டிப்பாக்க வேண்டாம்.
- ஹெச்ஐவி மருந்துகள் வேலை செய்ய, எல்லா மருந்துகளையும் முறையாகவும், தொடர்ந்தும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மருந்துகளை சரியாக எடுத்துக் கொள்ள தவறினால் அல்லது மறந்தால்,

அதன் பயன் இழக்கலாம், மேலும் இந்த கிருமியில் தாமாகவே மாற்றம் ஏற்பட்டு, மருந்திற்கு எதிராக மாறி பயன் அளிக்காமல் போகலாம்.

## நேவிராபைன்-இன் பக்க விளைவுகள் என்னென்ன?

- நேவிராபைனின் முக்கியமான பக்கவிளைவு தோல் அரிப்பு. இது சிகிச்சை தொடங்கிய முதல் 4 வாரங்களில் ஏற்படுகிறது.
  - இந்த அரிப்பு குறைவாக இருந்தால் சில மருந்துகளால் இதை பொதுவாக சமாளிக்கலாம், உங்கள் உடலும் மருந்திற்கு பழகிவிடக்கூடும்.
  - இந்த அரிப்பு அதிகமாக இருந்தால் - காய்ச்சலின் அறிகுறிகள், வாயில் புண், தசை அல்லது மூட்டுவலி, கண் வீக்கம் அல்லது சிவந்த கண்கள் போன்ற அறிகுறிகள் இருந்தால்- மருந்தை நிறுத்தி விட்டு உங்கள் டாக்டர் அல்லது மருந்து கடைக்காரரை அணுகவும்.
- மற்ற பக்க விளைவுகள்:
  - தலைவலி
  - வயிற்று அசுகம்
  - வயிற்று போக்கு
  - குமட்டல் மற்றும் வாந்தி
  - சோர்வு
- நேவிராபைனின் மற்றொரு அரிய ஆனால் மோசமான பின்விளைவு ஹெபாடைடிஸ் (கல்லீரல் வீக்கம்). இது 1% சதவிகிதத்தினரையே பாதிக்கிறது. சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் உயிருக்கு ஆபத்தாகிவிடும்.
- மருந்தினால் பக்க விளைவுகள் இருந்தால், டாக்டர் அல்லது மருந்து கடைக்காரரை அணுகி அறிகுறிகள் பற்றி விவாதிக்கவும். மருந்து கடைக்காரர் அல்லது டாக்டரிடம் பேசுமுன் மருந்தை நிறுத்தவோ, அளவை மாற்றவோ வேண்டாம். மருந்தை நிறுத்தாமலேயே பக்க விளைவுகள் எவ்வாறு சமாளிப்பது என்று அவர்கள் யோசனைகள் தெரிவிக்கலாம்.

## மற்ற மருந்துகளுடன் நேவிராபைனை எடுத்துக் கொள்ளலாமா?

- நேவிராபைன் மற்ற மருந்துகளுடன் இணைந்து செயல்படலாம். நீங்கள் எடுத்துக்கொள்ளும் டாக்டர் கொடுத்த மருந்துகள் மற்றும் வேறு (மூலிகைகள் மற்றும் வைட்டமின்கள் உட்பட) மருந்துகள் பற்றி டாக்டர் மற்றும் மருந்து கடைக்காரரிடம் கூறவும்.
- நீங்கள் நேவிராபைனை எடுத்துக் கொண்டால், ரிடாம்பின்னை தவிர்க்கவும்.
- மெத்தாடோன் மற்றும் ப்ரோடீஸ் இன்ஹிபிட்டர்ஸ் எனப்படும் மற்ற ஹெச்ஐவி மருந்துகளின் இரத்த அளவுகளை நேவிராபைன் குறைக்கலாம்:
  - சாகிநாவீர் (போர்டோவேஸ் மற்றும் இன்விரெஸ்)
  - இன்டினாவீர் (கரிக்ஸிவான்)
  - ரிட்டோநாவீர் (நார்வீர்)
  - நெல்பினாவீர் (விராசெப்ட்)
  - லோபினாவீர் (கெலட்ரா)
  - ஆம்ப்ரினாவீர் (அகெனெராஸ்).

நீங்கள் நேவிராபைன் உடன், இந்த மருந்துகளில் எதாவது ஒன்று எடுத்துக் கொள்கிறீர்கள் என்றால், அதன் அளவு சரிசெய்யப்பட வேண்டும்.

- நேவிராபைன் கருத்தடை மாத்திரைகளின் திறனை குறைக்கலாம். அதனால் நீங்கள் கருத்தடைக்கான வேறு வழிமுறையை பின்பற்றவும்.

## நேவிராபைனை மது மற்றும் தெருவோர போதை மருந்துகள் உடன் எடுத்துக் கொள்ளலாமா?

- பொதுவாக, ஹெச்ஐவி மருந்துகள் எடுத்துகொள்ளும்போது அதிக அளவு மது மற்றும் தெருவோர போதை மருந்துகளை தவிர்ப்பது நல்லது.
- நீங்கள் எடுத்துக்கொள்ளும் சில மருந்துகளுடன் மது விளைவுகளை எற்படுத்தலாம். குடிக்க வேண்டும் என்பதால் ஒரு நேர மருந்தை தவிர்க்க வேண்டாம்.

## நான் கர்பமாக இருந்தாலோ, தாய்பால் ஊட்டி வந்தாலோ நேவிராபைனை எடுத்துக் கொள்ளலாமா?

- நீங்கள் கர்பமாக இருந்தால், நேவிராபைன் மருந்து எடுத்துக் கொள்வது பற்றி டாக்டரிடம் கலந்து பேசவும்.
- தாய்பால் மூலமாக ஹெச்ஐவி கிருமி பரவும் என்பதால், ஹெச்ஐவி உள்ள பெண்கள் தாய்பால் கொடுப்பதை தவிர்க்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

## நேவிராபைனை எடுத்துகொள்ளும் போது வேறு என்னென்ன முன் எச்சரிக்கைகள் பற்றி நான் தெரிந்து கொள்ள வெண்டும்?

- நேவிராபைன் உங்கள் கல்லீரலை பாதிக்கலாம். மிக அரிதாக ஹெபடைடிஸ் ஏற்படலாம். உங்கள் கல்லீரல் செயல்பாட்டிற்கான இரத்த சோதனைகளை டாக்டரிடம் சென்று முறையாக பரிசோதித்து கொள்ளவும்.
- தொடர்ச்சியாக மருந்துகள் இருக்கிறதா என உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.
- நேவிராபைன் கிருமிகளை அழிப்பதில்லை, எய்ட்ஸ்-ஐ குணப்படுத்துவதில்லை. ஹெச்ஜவி பறவுவதை தடுப்பதும் இல்லை, அதனால் முன்எச்சரிக்கை எற்பாடுகளை செய்து கொள்ளவும், உடலுறவு கொள்ளும் போது (லேடெக்ஸ் காண்டோம்களை பயன்படுத்தவும்) அல்லது போதை மருந்து பயன்படுத்தும்போது (சுத்தமான ஊசிகளை பயன்படுத்தவும்).

Drug Information :: Nevirapine :: Tamil

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் ம்றறும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் எய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய எய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளைகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem